www.padippakam.com


# கண்ணோட்டம்

தனிச்சுற்றுக்கு மட்டும்

வெளியீடு : 1
மாசி 2000

KANNOTTAM කණ්ණෝට්ටම්


### நோர்வேயின் பிரசன்னம்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மீண்டும் ஒரு வாய்ப்பு

☛ திம்புப் பேச்சுவார்த்தை ☛ இந்திய–இலங்கை ஒப்பந்தம் ☛ பிரேமதாசா–புலிகள் உடன்பாடு
☛ சந்திரிகா–புலிகள் பேச்சுவார்த்தை ☛ லியாம்ஃபொக்ஸ் உடன்படிக்கை..........

**என நீண்ட பழங்கதை ஒன்றுண்டு. எவையுமே மக்களுக்கு அமைதியையோ அரசியல் தீர்வையோ தருவனவாக அமையவில்லை. மிஞ்சியிருக்கும் நம்பிக்கைகளையும் தகர்ப்பனவாகவே அமைந்தன. வெளிநாடுகளின் தலையீடில்லாமல் அரசியல் தீர்வு ஏற்படாது, எனவே மூன்றாம் தரப்பு வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக பலரிடமும் இருந்து வந்துள்ளது. இப்போது நோர்வே முன்வந்து நம்பிக்கையோடு விரலை வைத்துள்ளது. விரலைச் சுட்டுக் கொள்ளுமா? அல்லது வெற்றி பெறுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

பேச்சுவார்த்தை கடந்த 20 வருடங்களில் தமிழ் அரசியல் அரங்கில் அத்தி பூத்தாற்போல், மகாமகம் போல், கும்பமேளாபோல் வரும் ஒரு நிகழ்ச்சி, இந்தக் காலங்களில் மக்களின் மனங்களில் நம்பிக்கைகள் பிரவகிக்கும். புத்தாண்டு, நத்தார், பொங்கல் றம்ழான், வெசாக் போல் மக்கள் மனதில் சாந்தியும் சமாதானமும் பற்றிய நம்பிக்கைகள் நிலவும். மிகக்குறுகிய நாட்கள் இவை.

நாளாந்தம் யுத்த அவலச்செய்திகளை கேட்டு, பிணநாற்றத்தை நுகர்ந்து, மரணபீதி மனமெலாம் உறைந்து, ஆத்திர ஆவேச உணர்ச்சிகளுக்கு உட்பட்டு, உறவுகள் உடைந்து, வாழ்க்கை தேய்ந்தழிந்து போவது தான் இந்த 20 வருடங்களில் கூடிய நாட்கள் தமிழர் வாழ்வை ஆக்கிரமித்திருக்கின்றன. நம்பிக்கை தரும் இந்த மாதிரியான நாட்கள் மிகமிகச் சொற்பமானவை.

இந்த நாட்களில் நாட்டின் அரசியல், ஆயுத சக்திகள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டால் மக்களின் வாழ்வு சுபிட்சம் நிறைந்ததாக, ஒளிமயமானதாக மாறிவிடும்.

பாலஸ்தீனம், வட அயர்லாந்து, கிழக்குத் திமோர் என சமாதானப்பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் பிரச்சினைகளின் வரலாற்றுப்பின் புலங்கள், தன்மைகளுக்கு ஏற்ப தீர்வதற்கான காலம் வேறுபடுகின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை நிலமை சற்று வித்தியாசமானது. பேச்சுவார்த்தைகள் தொடங்கிய கையோடு சீர்குலைக்கப்படும் நிகழ்ச்சிகள் தான் இங்கு அதிகமாக காணப்படுகிறது அல்லது வெண்ணை திரண்டுவரும் நேரம் தாழி உடையும்.

ஈழத்தமிழர் அரசியலில் எதனையும் நம்பிக்கையுடன் முயற்சிப்பது, ஆக்பூர்வமாக சிந்திப்பது மிகவும் குறைவு. இது துரதிஷ்டமானதாகும். அவநம்பிக்கைவாதத்தை அல்லது எதிர்நிலை வாதத்தை விதைத்து அரசியல் செய்வது அழிவுகளை மாத்திரம் தான் மிஞ்சவைக்கிறது.

இந்த அவநம்பிக்கை வாதத்தை விதைப்பவர்கள் எதிர் நிலை நின்று சிந்திப்பவர்கள் தமது சொந்த வாழ்க்கை தொடர்பாக அவநம்பிக்கை வாதத்தை கொண்டிருப்பதில்லை. எதிர்நிலை நின்று சிந்திப்பதில்லை.

அவர்கள் தமது சொந்தக் குடும்பம், உறவுகளின் வாழ்வில் கண்ணுங்கருத்துமாக இருந்து கொண்டு தமிழ் சமூகத்திற்கு அவநம்பிக்கையை விற்கிறார்கள். அதில் பத்திரிகைக் காரர்களும், ஈழத்தமிழர்களுக்கென சர்வதேச வானொலிகள் பலவற்றில் செயற்படுபவர்களும் அடக்கம்.

தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்று இவர்கள் கூறமாட்டார்கள். தமிழர்களிடம் எதனை விற்கலாம் என்றே இவர்கள் முயற்சி பண்ணுகிறார்கள்.



இந்த சமூக அக்கறையற்ற மனிதாபிமானமற்ற, பொறுப்பற்ற, சுயநல சக்திகள் அம்பலப்படுத்தப்படுவதும், ஓரங்கட்டப்படுவதும் தமிழ் சமூகத்தின் விமோசனத்திற்கு அவசியமானது.

இனப்பிரச்சினை தீர்வில் மூன்றாவது சக்தி ஒன்றின் தலையீடு நீண்டகாலமாகவே மந்திர உச்சாடனம் போல் தமிழ் கட்சிகளால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தது. அது முக்கியந்தான்.

ஆனால், இதற்கு முன் இத்தகைய முயற்சி ஒன்று நடைபெறாதது போல் பேசமுற்படுவதுதான் நகைப்புக்கிடமானது. வரலாற்றுணர்வு சிறிதளவும் இல்லாமல் தான் தமிழர் அரசியல் ஓடிக்கொண்டிருக்கிறது. மனிதர்களிலும் கூட இந்தச் சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவன், உயிரை மாய்த்தவனை விட திடீரென முளைத்து தமிழன் தமிழன் என்று கத்துபவர்களை உடனே தலையில் வைத்து கூத்தாடும் மூடர்கள் எமது சமூகத்தில் மிகமிக அதிகம்.

இந்த 20 வருடங்களில் பல்வேறு முனைகளில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளின் பரிணாமத்தின் ஒரு பகுதியாகவே இன்றைய நிலையை நாம் கருத முடியும்.

நோர்வேயின் முயற்சி சர்வதேச சமூகத்தின் அக்கறையின் ஒரு வெளிப்பாடே. இந்த முயற்சிக்கு நாட்டுக்குள்ளேயே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலை இழந்திருக்கும் அனைத்து சக்திகளும் உதவ வேண்டும்.

அதேவேளை இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அண்டை அயலவர் என்ற ரீதியிலும், பாரம்பரிய கலாச்சார உறவுகளை கொண்டவர்கள் என்ற ரீதியிலும், தென்னாசியாவில் சார்க் அமைப்பின் ஜனநாயக நாடு என்ற ரீதியிலும் இத்தீர்மானகரமான காலகட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பும் முக்கியமானது என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் மனங்கொள்ளல் வேண்டும்.

பேச்சுவார்த்தை முறிவடைதல், திரும்பவும் பாரிய அளவில் யுத்தம் என்ற விசச்சுழலுக்குள் சிக்காமலிருப்பதே இங்கு முக்கியமானது. இவ்வாறு தான் திரும்ப திரும்ப நடைபெற்றுள்ளது. இம்முறையாவது பேரலை எழுப்பும் நடுச்சமுத்திரத்தில் விடப்பட்டது போன்ற நிலை இல்லாமல் தமிழர்களின் கப்பல் கலங்கரை விளக்கை நோக்கி செல்வதற்கான வழிதிறக்கப்பட வேண்டும்.

இதற்கு சகல சமூக சக்திகளும் அர்ப்பண உணர்வுடன் ஐக்கியமாக செயற்படவேண்டும். செய்வோமா?



**நாம் சுதந்திரத்துடன் வாழவேண்டும்; ஏனையவர்களுடன் சமமாக வாழவேண்டும்; சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்று குரல் எழுப்புவதெல்லாம் - அவ்வாறு உணர்வு பூர்வமாகக் கூறுவதெல்லாம் நாம் மற்ற இனத்தவர்களுடன் சேர்ந்து வாழத் தயாராக இல்லை என்றோ அல்லது சேர்ந்து வாழ்வதற்கு முயற்சிக்கக் கூடாது என்றோ அர்த்தப்படாது.**

www.padippakam.com



# புத்தாயிரமாம் ஆண்டில் ஈழத்தமிழர்கள்

நாம் புத்தாயிரம் ஆண்டினுள் பிரவேசித்துள்ளோம். கடந்த நூற்றாண்டின் இறுதி 20 ஆண்டுகளும் எமது மக்களைப் பொறுத்தவரையில் துயரமும் அவலமும் நிறைந்ததாகவே இருந்தது.

பிறந்திருப்பதோ புதிய நூற்றாண்டு. புத்தாயிரமாம் ஆண்டு! நாம் எமது அவலங்களையும், துயரங்களையும், மரணங்களையும் தொடர்ந்து இந்த புதுயுகத்திலும் கொண்டு செல்லப் போகின்றோமா? அல்லது இந்த நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்குரிய ஆக்கபூர்வமான வழிகளில் முயற்சிக்கப் போகின்றோமா? இந்த நிலைமைகளிலிருந்து விடுபட்டால்தானே எமது மக்கள் சுபீட்சமான பாதையில் செல்ல முடியும்.

ஷெல் வீச்சுக்கு நடுவிலும், அகதி முகாம்களில் மரங்களின் கீழ் பசி -பட்டினி நோய்நொடிகளுடன் எமது வாழ்வு தொடர்வது சிதானா?

கல்வியில்லாமல் - தொழிலில்லாமல் இருட்டில் எமது வாழ்வு தொடர்வது நியாயம்தானா?

எமது கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் பாழடைந்து விட்டனவே! எமது குடிமனைகள் பல தொல்பொருட் சின்னங்கள் போல் காட்சியளிக்கின்றனவே!

கிணறுகள் பல தூர்ந்துவிட்டனவே! எமது நிலத்தின் ஒரு பகுதியில் கண்ணிவெடிகள் புதைந்து கிடக்கின்றனவே.

காப்பரண்கள், கட்டுப்பாட்டுப் பிரதேசம், கட்டுப்பாடற்றபிரதேசம் என்ற பிரிவுகள் பாஸ் கெடுபிடிகள் என்பன எமது மக்களை திணறவைக்கின்றனவே!

திறமையானவர்கள் எல்லாம் நாட்டைவிட்டு ஓடிவிட, சமூகத்தின் பலவீனமான பிரிவுகளான கீழ் மத்தியதர வர்க்க, மத்திய தரவர்க்கப் பிரிவினரான மக்களும், வறுமையில் உழல்வோரும் மாத்திரமே தற்போது வடகிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் நிம்மதியாக வாழ வேண்டாமா? பிள்ளைகள் நவீன கல்வி எனும் பெரும் செல்வத்தைப் பெறவேண்டாமா? அது அவர்களின் அடிப்படை உரிமையல்லவா! அடுத்த நூற்றாண்டின் அறிவுச்சுடர்களாக விளங்க வேண்டியவர்கள் சன்னங்களோடு சன்னமாக அழிந்து போகவேண்டியதுதானா?

இன்று உலகில் பாதுகாப்பான பகுதிகளில்-குண்டுவிழாத, ஷெல் விழாத பகுதிகளில்-வளங்கொழிக்கும் நாடுகளில் வாழும் தமிழர்களே சிந்தியுங்கள்! உங்கள் மனச்சாட்சி வேலைசெய்ய வேண்டும். உங்களில் ஒரு பகுதியினர் இங்கு எத்தகைய நரக வேதனையை அனுபவிக்கிறார்கள் என்று உணர வேண்டும்.

உங்கள் உதவிகள் யுத்தத்திற்கானதாக இருந்தால் சமுதாயத்தின் வேருக்கு நீங்கள் கொதிநீர் ஊற்றும் வேலையைத்தான் செய்தவர்கள் ஆவீர்கள்.

## என்ன செய்ய வேண்டும்?

இந்தப் பேரழிவு உங்களையும் முகமற்றவர்களாக்கும்.

### கடல் கடந்து வாழும் தமிழர்களுக்கு...


சுவதேசம் வாழ் தமிழர்களே! நீங்கள் இனப்பிரச்சனைக்கு ஒரு ஆக்கபூர்வமான தீர்வு கிட்ட உதவுங்கள். எம்மக்கள் துயர்துடைக்க உதவுங்கள். உங்கள் உற்ற சுற்றங்கள், வருங்காலச் சந்ததியின் கல்வி கலாசார மேம்பாட்டுக்கு உதவுங்கள்.

யோசித்துப் பாருங்கள்! உங்கள் பிள்ளைகள் புதிய நூற்றாண்டுக்கு முற்றுமுழுதாகத் தம்மை தயார்படுத்தும்போது வடகிழக்கில் வாழும் உங்கள் பிள்ளைகளைப் போன்றவர்கள் என்ன நிலையில் வாழ்கிறார்கள் என்று.

இந்த நூற்றாண்டின் இந்த தொடக்க ஆண்டுகளிலேயே எமது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்ட வேண்டும்.

ஜனநாயகம், மனித உரிமை உறுதிப்படுத்தப்பட்ட சுதந்திரமான வாழ்வு கிட்ட வேண்டும்.

எங்கள் மக்களுக்கு இந்த அரசியல் சுதந்திரம் தவிர வேறு விடயங்களும் தேவைப்படுகின்றன. உலகில் பல்வேறு பகுதி மக்களுக்கும் கிடைக்கும் பல விடயங்கள் எமது மக்களுக்கு கிடைப்பதில்லை. செழிப்புடன்



சொந்தக் காலில் நின்ற சமூகம் இன்று கையேந்தும் சமூகமாக நின்று கொண்டிருக்கிறது.

* எமது மக்களுக்கு நல்ல உணவு கிட்டவேண்டும்.
* சிறந்த மருத்துவ வசதி.
* தமது குடிமனைகளில் சுதந்திரமாக வாழும் நிலை உருவாக வேண்டும்.
* போக்குவரத்து வசதிகள்.
* தொலைத்தொடர்பு வசதிகள்.
* புதிய நூற்றாண்டுக்கான சிறப்பான கல்வி.
* சிறந்த தொழில்வாய்ப்புக்கள்.
* சுதந்திரமாக ஆன்மீக விடயங்களில் ஈடுபடுவதற்கான உரிமை.
* அச்சமற்ற ஒரு சூழல்.

இவை எம்மில் ஒரு பகுதியினருக்கு கிடைத்தாலும் பல லட்சம் பேர் இதையெல்லாம் இழந்து நிற்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.



இலங்கையின் தென்பகுதியில் வாழ்பவர்கள், இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் முன்னோக்கிய திசையில் பீடு நடைபோடுகையில் எமது சமுதாயத்தில் ஒருபகுதியினர் வன்முறைக்குப் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம்! ஒரு பகுதி தமிழர்களின் அழிவும், ஒரு பகுதி தமிழர்களின் வாழ்வும் நியாயமானதா?

பாரதி இந்திய சுதந்திரத்திற்காகப் பாடும்போது, "நாம் வாழின் 30கோடியும் வாழ்வோம் வீழின் 30கோடியும் வீழ்வோம்" என்றுதானே பாடினான்.

இங்கு நடப்பது ஒரு பகுதி தமிழர்களின் செழிப்பான வாழ்வுக்காக இன்னுமொரு லட்சக் கணக்கான தொகையினரின் நரகவாழ்வல்லவா?

எமது சமூதாயத்திற்கு மிக வலுவான பாரம்பரியமுண்டு. தலைமுறை தலைமுறையாக எம்மிடம் இருக்கும் கடும் உழைப்பை நாம் முதலீடாக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனித் தனித் தீவுகளாக இருந்துவிட்டால் போதும் என்று நினைக்கின்ற சுயநலப்போக்கு அகல வேண்டும்.

மற்றவர்கள் சாகட்டும். எனக்கு பிரச்சினை இல்லை... அல்லது என் இருப்புக்கு அது சாதகமாகத்தானே இருக்கிறது. நான் எனது பெண்டு, பிள்ளைகளுடன் தமிழ் வீரம் பேசிக்கொண்டு சுகமாக வாழ்ந்தால் சரியென நினைப்பது மிகவும் வெட்கக்கேடானதும், கொடூரமானதுமாகும்.

இங்கு திரும்பத் திரும்ப நாம்

**தி. சிறிதரன்**

கூறவிழைவது என்னவென்றால், போரில்லாத பகுதிகளில்-செழிப்பான பகுதிகளில் புகலிடத்தை தேடிக்கொண்டு போருக்குள் வாழ்பவர்களை 'போராடுங்கள் மரணியுங்கள்' என்று கூறும் வக்கிரத்தைத்தான். வெளியில் வாழும் எல்லாத் தமிழர்களும் இப்படியில்லையாயினும் கணிசமான தமிழர்கள் இப்படித்தான் வாழ்கிறார்கள்.

### பாரம்பரியங்கள், அரசியல் சுயாதீனம்

எமது சமூகம் அதன் பாரம்பரியத்தில் கொண்டிருக்கும் கீர்த்திகளுடன், அரசியல் சுயாதீனத்துடன் மேலும் பல செழுமைகள் பெறுவதற்கு நாம் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும்.

தொடர்ச்சி 9ம் பக்கம்


**தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!**

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

37/2, 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95, 95144, Garges Les, Gonnesse Cedex, France.

Post Bag No: 1041, Madras-17 India.

B.M. Box No: 1738, London - Wclx - 3NN, U.K.

P - Fach No: 506, Bern - 17, Switzerland.

310 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். ☎ 021 2022

No: 1/1 நெவில் வீதி திருகோணமலை. ☎ 026 24221

29A, வாவிக்கரை வீதி-1 மட்டக்களப்பு. ☎ 065 25669

குருமண் காடு மன்னார் வீதி, வவுனியா.

மின் அஞ்சல் முகவரிகள் (E-Mail Addresses)
epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada


படிப்பகம்

www.padippakam.com



# மாநில சுயாட்சி நிச்சயமானால்



# அமைதியும் நிச்சயம்

சி. திருநாவுக்கரசு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முனைப்புக்கள் முன்னெப்போதையும் விட தீவிரமடைந்துள்ளன. இது வரவேற்கக்கூடிய, நம்பிக்கைதரக்கூடிய ஒரு நிலைமையாகும்.

இந்த நாட்டில் 50வருடங்களாக எரிந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பல்வேறு முனைப்புக்கள், எத்தனிப்புக்கள் வெவ்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் இந்த 50 வருடங்களில் தமிழ் சமுதாயம் பெற்றுக்கொண்டது என்னவென்று பார்த்தால் மிக மிக சொற்பமானவையே. இழந்தவைகள் அழிவுகள் அளவிட முடியாதவை. கடந்த பல ஆண்டுகளாக அழிவுகள் மட்டுமே முதன்மையாக இருந்து வருகின்றன.

தமிழ்ச் சமூகத்தின் அழிவு தடுத்து நிறுத்தப்பட்டு அதிகாரப் பரவலாக்கமும் அமைதியும் சமாதானமும் ஏற்பட தமிழ்ச் சமூகத்தின் பொறுப்புள்ள பிரஜைகள் என்ன செய்ய வேண்டும்? இந்தக் கேள்வி கடந்த 10வருடங்களுக்கு மேலாக எழுப்பப்பட்டு வருகிறது. ஒரு சமூகம் அழிந்துகொண்டிருக்கிறது. எதிலுமே நம்பிக்கை கொள்ள முடியாது எனக் கூறிக்கொண்டு இருப்பது பொறுப்புள்ள ஒருவருக்கு உரியதாகாது. இன்று நிலவும் சூழலில் தமிழினம் இருக்கும் நிலைமையில் என்ன செய்யவேண்டும் என்பதை மிகத்தெளிவாக இனம் கண்டுகொள்ள வேண்டும்.

1. அதிகாரப்பரவலாக்கலில் அக்கறையுள்ள அனைத்து அரசியல் சக்திகளும் ஒரு மனந்திறந்த கலந்துரையாடலை நடத்த வேண்டும்.

தனிப்பட்ட கட்சி நலன் மற்றும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் களையப்பட்டு இந்த நாட்டின் பிரதான பிரச்சினை ஒன்றுக்கு தீர்வுகாண முற்பட்டிருக்கிறோம் என்ற பொறுப்புணர்ச்சியுடன் அவர்கள் செயற்படவேண்டும். குறுகிய அரசியல் நலன்களுக்கு ஏற்ப இனப்பிரச்சினையை அவ்வப்போது பயன்படுத்த முற்பட்டதே கடந்த 50வருட வரலாறு ஆகும்.

இந்த வரலாற்றை இந்த புத்தாயிரமாண்டுகளின் முற்பகுதிகளிலாவது நாம் மாற்றுவதற்கு முயலவேண்டும்.

2. வெறுமனே பேசுவது என்பதுடன் நிறுத்திவிட முடியாது. பேசுவது என்பது காலம் கடத்தும் ஒரு விடயமாக அமையக்கூடாது. பேச்சுவார்த்தைகள் ஒரு திட்டவட்டமான முடிவினை உருவாக்குவதாக இருக்க வேண்டும்.

★ வடக்கு, கிழக்கு இணைப்பு.

★ நிலத்தின் மீதான அதிகாரத்தை பகிர்ந்தளித்தல்.

★ தெளிவான பொலிஸ் அதிகாரம்.

★ முறையான வரிவிதிப்பு அதிகாரங்கள்.

★ கடல்வளம், கல்வி, சுகாதாரம் ஆகியவற்றின் மீதான அதிகாரங்கள்.

போன்ற ஜீவாதாரமான விடயங்களில் தெளிவான உடன்பாட்டுக்கு, முடிவுக்கு வரவேண்டும்.

3. அடுத்து, இந்த உடன்பாடுகளை முன்வைத்து எதிரெதிராக முரண்பட்டு நிற்கும் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு யுத்தத்தைத்தை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவருவதற்கும் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் உறுதியாக நிலை நிறுத்துவதற்கும் விரிவான அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகள் ஒவ்வொரு தரப்பினரும் தந்தமது நிலைப்பாடுகளை திட்டவட்டமாக தெளிவாகவும் முழுமையாகவும் முன்வைக்கவேண்டும்.

அவை பின்வரும் வரிசைக் கிரமத்தில் அமையலாம்.

★ அதிகாரப்பரவலாக்கலில் ஒரு நியாயமான புள்ளியில் சமரசத்தை செய்தல்.

★ மிக முக்கியமான விடயம் ஜனநாயக விரோத உயிர்ப்பலிகளை முடிவுக்குக்கொண்டுவருதல்.

★ மாற்றுக்கருத்து, ஜனநாயக முறைகளில் விடயங்களை எதிர் கொள்ளல். சாதாரண மக்களின் குரலை வெளிப்படுத்தி அதற்கான உரிமையை உறுதி செய்தல்.

4. அரசியல் கட்சிகள் தவிர்ந்த.

★ சர்வமத ஸ்தாபனங்கள்.



★ அரச சார்பற்ற நிறுவனங்கள்.

★ கல்விமான்கள்.

★ பத்திரிகையாளர்கள்.

★ வேறு சமூக நிறுவனங்கள்.

ஆகியவற்றின் உதவி ஒத்தாசைகளை இந்த தொடர் நடவடிக்கைகளுக்குப் பெற்றுக்கொள்ளுதல்.

இந்த ஸ்தாபனங்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்பட்டு உரிய முக்கியத்துவத்துடன் ஒரு பொது உடன்பாட்டை உருவாக்குவதற்கான தொடர் நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படவேண்டும்.

5. இந்த நாட்டு மக்கள் தொடர்ச்சியாக நல்லுறவைப் பேணி வந்த, காலச்சார பாரம்பரிய உறவுகள் கொண்ட நாடுகள் இந்த தொடர் நடவடிக்கைகளில் மத்தியஸ்தராக அல்லது உதவுபவராக செயற்படுவது நல்லது. அல்லாவிடில் சர்வதேச அளவில் நற்பெயரைப்பெற்ற ஜனநாயக நாடு ஒன்றோ அல்லது பலவோ மேற்கூறிய மற்றைய நாட்டுடன் இணைந்து இந்த பணியை மேற்கொள்வது சிறந்தது.

இந்த நாட்டின் சமூக, அரசியல் சக்திகளின் உள்ளார்ந்த ஆற்றலில் குறைபாடுகள் இருப்பதால் இத்தகைய மத்தியஸ்தர் அல்லது உதவுபவர்கள். அவசியப்படுகின்றனர்.

உலகில் அண்மைக்காலத்தில் தீர்வு காணப்பட்ட, தீர்வுகாண எத்தனித்த நாடுகள் பலவற்றில் இத்தகைய ஒருவர் செயற்பட்டு இருக்கிறார் என்பது ஒரு யதார்த்த உண்மையாகும்.

6.அதிகாரப்பரவலாக்கல், சமாதானத்திற்கான விழிப்புணர்வு, ஆர்பாட்டங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடாத்துதல் பிரசுரங்களை வெளியிடுதல்.

இந்நிகழ்ச்சிகள் நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட வேண்டும்.

வடகிழக்கில் குறிப்பாக நடத்தப் படவேண்டும்.

யுத்த அழிவுகளையும், சமாதானத்திற்கான தேவை ஐக்கியத்தின் அவசியம் என்பனபற்றியும் கண்காட்சிகள், திரைப்பட நிகழ்ச்சிகளூடாக விளங்க வைக்கப்பட வேண்டும்.

உள்நாட்டில் மக்களின் ஒத்துழைப்பு, சர்வதேச சக்திகளின் உதவி அரசியல் கட்சிகளிடையே மனந்திறந்த பேச்சுவார்த்தை மற்றும் புரிந்துணர்வுடனான இதயசுத்தியான முன்முயற்சி அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிவுஜீவிகளின் பங்களிப்பு.

இவை அணைத்தையும் உள்ளடக்கிய சமாதானத்திற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவை கடும் முயற்சி, கடும் உழைப்புடன் தொடர்பு பட்டவை இத்தனையும் மேற்கொள்ளப்பட்டால் தான் நாம் நடைமுறைப் பயனை எட்டமுடியும்.

7. நடைமுறையென்பது திருகோணமலையைமையமாக வைத்து ஒரு பிராந்திய அரசை உருவாக்குவதே. இதன் அரசாங்கம் ஜனநாயகத் தேர்தல் முறையினால் தெரிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். ஆளும்கூட்டணி, எதிர்க்கட்சி அல்லது எதிரணி ஆகிய சகல ஜனநாயக முறையிலான செயற்பாடுகளும் இங்கு இருக்க வேண்டும்.

இதை ஏன் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறதென்றால் தற்போதைய அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக தெரிவுக்குழுவில் நடைபெற்ற விவாதத்தில் காலஞ்சென்ற ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனை ஒன்றுண்டு. ஆதாவது கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்றப மந்திரி சபையில் ஆட்களை நியமித்தல் அதுவும் தேர்தல் ஆணையாளரே நியமித்தல். இது ஜனநாயகத்தை அரசியல் தலைமைத்துவத்தை நகைப்புக்கிடமாக்கிவிடும்.

அதிகாரப்பரவலாக்கலை வெறும் நிர்வாக நடவடிக்கைகள் என குழப்பம் ஏற்பட இடமுண்டு. எனவே புதிய தீர்வுத்திட்ட யோசனைகளில் உள்ளடக்கப்பட் இந்த விடயம் நீக்கப்படவேண்டும்.

8. திருமலையில் தனக்கென ஒரு அரசு இயங்குவது என்பது வடக்கு-கிழக்கு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக, அதனூடாக தமது உரிமைகளை மக்கள் அனுபவிப்பதாக, தமது உரிமைகளைப் பெற்றுக்கொண்டதாக உணரச்செய்தல் வேண்டும்.

9. முக்கியமான விடயம் வடகிழக்கில் உள்ள முஸ்லீம் மக்கள், இம்மக்கள். தாம் இரண்டாம் தரப்பிரஜைகள் என நினைக்கும் நிலைக்கு இடம்கொடுக்காத வகைக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள இருத்தல் வேண்டும்.

10. வட கிழக்கு பிராந்தியத்தில் இருந்து தவிர்க்கப்பட கூடிய சிங்கள மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களுடன் இணைத்தும். அதனூடாக ஏற்படும் நிலப்பரப்பு இழப்பு மற்றும் நீர்வள பிரச்சினைகளுக்கு மாற்றீடான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

11. முஸ்லீம் மக்கள் தனிப்பிராந்தியம் ஒன்றை கோரும் பட்சத்தில் அதனை அங்கீகரிக்கும் அதேவேளை தேவையற்ற சர்வசன வாக்கெடுப்புக்களை தவிர்த்தல் வேண்டும்.

12. வடக்கு கிழக்கில் எந்த மதத்திற்கும் சிறப்புச்சலுகைகள் எதுவும் இருக்கக்கூடாது.

13. அதேவேளை மத்தியிலும், மாநிலத்திலும் பல்லினத்தன்மையை உறுதியாகப்பேணும் வகையில் அரசியல் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

14. தேசிய அளவில் உபஜனாதிபதி, உதவிப்பிரதமர் ஆகிய பதவிகள் இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள், முஸ்லீம்கள், அல்லது மலையக தமிழர்கள் என்போருக்கு உரியதாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

15. இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் நலன்களைப் பேணுவதற்கென நாடாளுமன்றத்தில் இரண்டாவது சபை ஒன்று இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். அந்த சபையில் தமிழர்கள், முஸ்லீம்கள் மற்றும் மலையகத்தமிழர்கள் ஆகியோரின் கூட்டு மொத்த பிரதிநிதித்துவம் அந்த சபையின் பிரதிநிதித்துவத்தில் 50வீதத்திற்கும் குறையாது இருத்தல் வேணடும்.

இந்த பிரமாண்டமான முயற்சிகளில் அர்ப்பண உணர்வுடன் செயற்பட்டு நாம் இந்த நாட்டில் வருங்காலச்சந்ததிக்கு உரிய பங்களிப்பை ஆற்றுதல் வேண்டும். அழிவை நிறுத்தி சுபிட்சப்பாதைக்கு அணிவகுத்துச்செல்வோம். இது மாபெரும் ஒரு வரலாற்றுக் கடமை. இவற்றை தனிப்பட்ட வேறுபாடுகளையும் மறந்து ஒரு முகப்பட்டு நின்று பெறுவோம்

படிப்பகம்

www.padippakam.com






# மக்களைக் காப்பாற்ற கொலைகாரர்கள் பரிமாற்றம்

கடந்த நூற்றாண்டைக் கடக்கும் இறுதி நேரத்தில் இந்தியப்பயணிகளின் உயிர் ஆப்கானிஸ்தானிலுள்ள கண்டகார் விமான நிலையத்தில் ஊசலாடியது.

கடந்த டிசம்பர் மாதத்தின் கடைசி நாட்களை பரபரப்பாக்கிய, காட்மண்டிலிருந்து புதுடில்லி நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த இந்தியன் எயர் லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டது. போன நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் நடந்த நெஞ்சை உலுக்கிய சம்பவம்.

காஷ்மீர் மக்களின் விடுதலையின் பெயரில் பாகிஸ்தானின் உதவியில் செயற்படும் பயங்கரவாதிகளே இந்த விமானத்தை கடத்தினார்கள் என்பது முன்னரே ஊகிக்கப்பட்டிருந்தாலும், பின்னர் தான் உறுதிப்படுத்தப்பட முடிந்தது.

புதுடில்லி திகார் சிறையிலிருந்த தமது சகபாடிகள் சிலரை விடுதலை செய்யக்கோரி நடந்த இந்த கடத்தல் நாடகத்திற்கு பல கொலைகளைப் புரிந்த கொலைகளுக்கு உடந்தையாக இருந்த மூன்று மதத்தீவிர வாதிகளை விடுதலை செய்து பயணிகளின் உயிரை இந்தியா காப்பாற்ற வேண்டியிருந்தது.

தீவிரவாதிகள் தேன் நிலவுக்கு சென்றிருந்த ஒரு இளைஞனைப் படுகொலை செய்து விமானத்துக்கு வெளியே போட்டனர். அத்தோடு ஏனைய பயணிகள் பற்றி எந்தச் சந்தர்ப்பத்தையும் கொலைகாரர்களுக்குக் கொடுக்க முடியா நிலைமைக்கு இந்திய அரசு உள்ளானது, மதத் தீவிரவாதிகள் தமது கொலைகார ஆற்றலை உலகுக்கு நிருபித்தார்கள்.

புதிய ஆயிரமாம் ஆண்டு , புதிய நூற்றாண்டு, புதிய ஆண்டு பிறக்கப்போகும் வேளையில் இந்திய மக்கள் அனைவரும் தமது அரசாங்கம் இந்தப் பயணிகள் விடயத்தில் என்ன செய்யப் போகின்றது என மன அந்தரத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

கடைசியாக கடந்த நூற்றாண்டின் கடைசி நாளில் மூன்று மதத்தீவிரவாதிகள் பரிமாறப்பட்டு பணயக்கைதிகளான பொதுமக்களை விடுதலை செய்வதற்குள் மதத்தீவிரவாதிகளை விடுவித்துக்கொண்டு இந்த வன்முறையாளர்கள் ஆப்கானிய எல்லைகளைத் தாண்டினார்கள்.

தென்னாசியாவில் அணுவாயுதத்தை வைத்திருக்கும் ஒரு சர்வதேச பயங்கரவாதக் கூடாரமாக பாகிஸ்தான் மாறியிருக்கிறது.

பாகிஸ்தானை பயங்கரவாத நாடென இந்தியப் பிரதமர் வாஜ்பேஜி அவர்கள் சரியாகவே குறிப்பிட்டார்.

நவாஸ் செரிப் பதவியிலிருந்த காலத்தில் லாகூருக்கு புதுடில்லியிலிருந்து பஸ் பயணம் மேற்கொண்டு சமாதான நம்பிக்கைகளை உருவாக்கியவர் அவர்.

ஆனால் அத்தனையையும் தவிடுபொடியாக்கி பிராந்திய பதட்டத்தை உருவாக்கி இருக்கிறது பாகிஸ்தான்.

பாகிஸ்தானின் தற்போதைய போக்குகள் இந்தியாவுக்கு மாத்திரமல்ல் தென்னாசியாவுக்கே அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது.

பாகிஸ்தானில் 80களின் பிற்பகுதியில் துளிர் விடத்தொடங்கிய ஜனநாயகம். இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதன் மூலம் முடிவுக்கு வந்திருக்கிறது.

பெனாசிர் பூட்டோவின் தந்தை சுல்பிகார் அலி பூட்டோவிற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது போல் நவாஸ்செரிப் அவர்களுக்கும் நடக்குமோ என உலகில் ஜனநாயக வாதிகள் அச்சமுற்றிருக்கிறார்கள்.

இதற்கிடையே முசாரப்பின் இராணுவ சதிப்புரட்சி நடந்தவுடன் அமெரிக்கா அதனை சந்தேகக்கண்கொண்டு பார்த்தது. பின்னர் புதிய சர்வாதிகார அரசுடன் சுமுக உறவை மேற்கொண்டது.

இது தென்னாசியா தொடர்பான அமெரிக்காவின் கொள்கையை எடுத்தியம்புகிறது. இதற்கிடையே பாகிஸ்தானின் நீதிபதிகள் புதிய இராணுவ ஆட்சியாளர்கள் முன் சத்தியப்பிரமாணம் எடுக்க மறுத்து வருகிறார்கள். இது ஒரு வரவேற்க வேண்டிய அம்சம்.

ஆனால் இராணுவம் ஆட்சிக்கு வந்தவுடன் பாகிஸ்தானில் இனிப்புக் கொடுத்து கொண்டாடியவர்களை, வீதிகளில் கூத்தாடியவர்களை, திருப்திப்பட்டு அறிக்கை விட்ட முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ அவர்களை என்னவென்று அழைப்பது.

இவருடைய தந்தை சுல்பிகார் அலிபூட்டோவின் அரசை இராணுவச் சதிப்புரட்சி மூலம் தானே கவிழ்த்தார்கள். அவர்கள் தானே பூட்டோவை தூக்கிலிட்டார்கள். அவர் சிலவேளைகளில் இராணுவ ஆட்சியாளர்களின் தயவுடன் ஊழல் குற்றச்சாட்டுகளுடன் சிறையில் இருக்கும் தனது கணவரை விடுவிக்கலாம் எனக் கருதி இருக்கக்கூடும்.

எது எப்படியோ பாகிஸ்தானின் துர்நடத்தைகளுக்கெதிராக "சார்க்" அளவிலும், சர்வதேச அளவிலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

---

யாழ் குடாநாடு

# படாத பாடுபடும் மீனவர்களும் விவசாயிகளும்




கடந்த இரண்டு மாத காலமாக யாழ் குடாநாட்டின் கரையோரப்பகுதிகளான குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தனங்கிளப்பு மற்றும் கச்சாய் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் படும் அவலங்களை நாம் கண்டும், கேட்டும், உணர்ந்துமுள்ளோம்.



சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதியிடமும், மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதியிடமும் கடற்தொழிலாளர் சார்பில் கடற்தொழிற்சங்க பிரதிநிதி மகஜரை கையளிக்கிறார்.

இராணுவம் வடபுலத்தைக் கைப்பற்றிய பின்னர் கைதுகள், சோதனைச்சாவடிகள், மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடி, யாழ் கொழும்பு பயணக்கெடுபிடிகள் போன்ற அசௌகரியங்களுக்கு மத்தியிலும் சுயமாகத் தொழில் செய்து தமது குடும்பத்தைக் காப்பாற்றும மன நிறைவோடு வாழ்ந்து வந்தனர்.

கடந்த இரண்டு மாத காலமாக கரையோரப்பகுதிகளை நோக்கி ஏவப்படும் ஷெல் தாக்குதல்களால் பொதுமக்கள் இறந்தும், ஊனமுற்றும், இடம் பெயர்ந்துமுள்ளனர். இவ்வாறு சொந்த இடங்களை விட்டு இடம்பெயர நிர்பந்திக்கப் பட்டுள்ளமையால் அவர்கள் சொலலொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடலில் வலைகளை விரித்த மீனவர்கள் அவற்றை மீள எடுத்து வரமுடியாமல் அவதிப்படுகின்றனர். அண்மைக்கால ஷெல் தாக்குதல்களால் தொழிலுக்கு செல்ல முடியாமல் ஜீவனோபாயத்திற்கே வழியறியாமல் நிற்கும் இவர்கள் இப்போது தமது தொழில் செய்யும் உபகரணங்களையும் இழந்து கையறு நிலையில் உள்ளார்.

கையிலிருந்ததை எல்லாம் வயல் வேலைகளுக்காக செலவு செய்த விவசாயிகள், வயலில் விளைந்த நெல்லை உரிய காலத்தில் அறுவடை செய்ய முடியாமல் தமது கண்ணெதிரிலேயே அவை பாழடைவதை பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனால் வயல் வேலைகளில் ஈடுபட்டு அன்றாடம் உழைத்து ஜீவிக்கும் கூலித் தொழிலாளர்களும் தொழில் இழந்து அல்லல் படுகின்றனர்.

பகலில் சொந்த வீடு, இரவில் இரவல் வீடு என வருமானம் இழந்து, அலைவதோடு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு, வாழ்கின்ற மக்களின் துயரத்தை துடைக்க அரசும் புலிகளும் முன்வரவேண்டும் என்பது இம்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

மக்கள் இடம்பெயர்ந்து இரண்டு மாதங்களாகின்ற போதிலும். ஒரு தடவை மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்கும் நிவாரண உதவிகள் துரிதமாகக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் கூடிய விரைவில், மீளக்குடியேறுவதற்கு உரிய கால அவகாசம் அளிப்பதோடு, விவசாயிகள், தமது வயல்களில் விளைந்த நெல்லை அறுவடை செய்வதற்கும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம்.

புலிகளின் ஷெல் தாக்குத லைக் காரணங்காட்டி மக்களின் ஜீவாதாரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை தள்ளிப்போட வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

**யாழ் மாநகர சபை உறுப்பினர்கள்**
**த. சுபத்திரன்**
**ம. மங்களநேசன்**

(குடாநாட்டுக் கரையோரப்பகுதி மீனவர்களும், விவசாயிகளும் முகங் கொடுத்துவரும் இன்னல் பற்றி அமைச்சர் அனுரத்த ரத்வத்தை அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் தமிழாக்கம்.)

படிப்பகம்

www.padippakam.com





# பாடும் மீன் நாட்டுக்கும் பாஸ்!!!!

வன்னியில் நடைமுறை அகலாமல் இருக்கையில் அதனையொத்த நடைமுறையொன்றினை இம்மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்த பாதுகாப்பு அதிகாரிகள் காத்திருப்பது பல பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு அன்றாட முகம் கொடுத்து மனம் நொந்திருக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்படையச் செய்வதுடன் இச்செயலானது "வெந்த புண்ணில் வேலினைப் பாய்ச்சுகின்ற" ஒரு செயலுமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளின் சில கிராமங்கள் முழுமையாகவும், பகுதியாகவும் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசமாக உள்ளது. இம்மாவட்டத்தின் புவியியல் சூழலின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கோ அல்லது கட்டுப்பாடில்லாத பகுதிக்கோ ஒருவர் ஒரு நாளில் பல தடவைகள் சென்றுவரக் கூடிய வாறு மேற்படி இரு பிரதேசப்பரப்புகளும் அமைந்துள்ளன.

மட்டக்களப்பு நகரத்தின் தென் கோடியில் அமைந்துள்ள பட்டிருப்பு பாலம் மற்றும் அம்பிளாந்துறை, மண்முனைத்துறை நகரின் மேற்கே வவுணதீவுப் பாலம் வழியாகவும், நகரின் வடக்கே செங்கலடி, பதுளைவீதி மற்றும் வாகரைவீதி என மக்கள் அன்றாடம் தங்கள் போக்குவரத்துகளைச் செய்கின்றனர்.

இவர்கள் மேற்படி வழிகளால் ஒரு நாளைக்கு எத்தனை தடவையும் சென்றுவரக்கூடிய நிலைமைகளே தற்போது உள்ளன. ஆனால் "பாஸ்" நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டால் இப்போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்படுவதுடன் மக்கள் பல அசெளகரியங்களை எதிர்நோக்குவர்.

இந்தப்பாஸ் நடைமுறையின் கொடூரம் மக்களுக்கு புரியாமல் இருக்கலாம் அறிமுகப்படுத்தப்பட்டு அதனை அனுபவித்தாலே அதன் அர்த்தம் புரியும்.

வன்னிமக்கள் இதற்காகப் பல படிக்கட்டுகளில் ஏறி இறங்குவதையும், அன்றாடக்கடமைகளைச் செய்யமுடியாமல் "பாஸ்" "பாஸ்" என மக்கள் அலைந்து திரிவதைக்காணமுடிவதுடன் பல முக்கியமான விடயங்களைச் செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.

வன்னியில் மக்களின் இருப்பிற்கும், தன்மைக்கும் ஏற்றாற்போல் நிரந்தரப் "பாஸ்", மூன்று மாதப் "பாஸ்", மூன்று மாதப் "பாஸ்" (வவுனியாவுக்குள் மட்டும்) ஒருவாரப் "பாஸ்" ஒரு நாள் "பாஸ்" என உள்ளன. இவை நடைமுறையில் உள்ளபோதும் நிரந்தரப் பாஸ் வைத்திருப்பவர்கள் மட்டுமே வவுனியாவை விட்டு வெளி மாட்டங்களுக்குச் செல்லமுடியும்.

வன்னிக்குள் ஒருவர் பிறமாவட்டங்களில் இருந்துவருவதாயின் ஈரப்பெரியகுளம், வவுனியா புகையிரத நிலையம், ஆகிய பாஸ் வழங்கும் சாவடிகளில் ஒரு நாள் "பாஸ்" வழங்கப்படும். அவர் ஒரு நாளைக்கு மேல் நிற்பதாயின் அது முடியாமல் போய்விடும். இதனால் இம்மாவட்டத்திற்குள் வருபவர்கள் அதிக நாள் தங்கியிருக்க நேரிட்டால் பெரிதும் சிரமப்படுவதுடன் சில நேரங்களில் அந்நபர் கைதாகக்கூடிய நிலைமைகளும் உள்ளன.

வன்னியிலிருந்தோ அல்லது மன்னாரிலிருந்தோ வவுனியா நகரத்திற்கு வந்து நாட்டின் ஏனைய இடங்களுக்குச் செல்வதற்கு அம்மாவட்ட மக்கள் மற்றவர்களின் நெஞ்சங்களை கரைய வைக்கும் பல சோகத்திற்கு ஆளானார்கள்.

ஒரு சம்பவத்தைக்குறிப்பிட்டால் இதன் கொடுமை புரியும் மன்னாரிலிருந்து வைத்திய சிகிச்சைக்

**வாவிக்கரையூரான்**

காக வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு குழந்தைக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படுவதால் அனுராதபுரத்திற்கு "அம்புலன்ஸ்"வண்டியில் அனுப்பிவைத்தனர். அங்கும் சிகிச்சை பலனளிக்காததால் அக்குழந்தை இறந்துவிட்டதாக டாக்டர்கள் வவுனியாவில் தங்கியிருந்த தாய்க்கு தகவல் அனுப்பினர். அத்தாயிடமோ "பாஸ்" இல்லை. இதனால் அத்தாய் அனுராதபுரத்திற்கு சென்று தனது செல்ல மகளின் பூ உடலை பார்க்கமுடியாமல் டாக்டர்களுக்கு "போன்" செய்து அடக்கம்பண்ணுங்கள் என்று சொல்லிய இந்தக் கொடுமை "பாஸ்" நடைமுறையாலேயே வந்தது. இதே போல் எத்தனை எத்தனையோ.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இரயில் சேவை இல்லை. இதனால் நாள் ஒன்றுக்கு பதின்மூன்று பஸ்களில் நாட்டின் பிற இடங்களுக்கு மக்கள் செல்கின்றனர். வெளிமாவட்டங்களிலிருந்து கல்வி, தொழில், வியாபாரம் என பலர் தங்கிவாழ்கின்றனர்.

"பாஸ்" நடைமுறையினை அரசு அமுல்படுத்தினால் மட்டக்களப்பும் ஒரு வன்னியாக மாறிவிடும் என்பதில் துளிகூட சந்தேகம் இல்லை. ஆகவே துன்பப்பட்டு தங்கள் வாழ்க்கையினை நடாத்திக்கொண்டிருக்கும் மக்களுக்கு மேலும், மேலும் துன்பத்தினை ஏற்படுத்துவதை அரசு கைவிட வேண்டும்.

## கெட்பாரற்றுப் போன சாராதாம்பாள் பாலியல் பலாத்காரப் படுகொலை

யாழ் -புங்குடுதீவில் குரூரமாக பாலியல் பலாத்காரப் படுகொலைக்கு இலக்கான கண்ணகை அம்மன் கோவில் பூசகர் சரவணபவன் அவர்களின் சகோதரி சாராதாம்பாளின் படுகொலை கல்லையும் கரைய வைக்கக் கூடியது.

சாதாரண சில்லறைப் பிரச்சினைகளுக்கெல்லாம் தெருவில் இறங்கும் மாதர் அமைப்புக்கள் இது விடயத்தில் தம்மை மாத்திரமல்ல மனிதாபிமானத்தையும் சேர்த்து மெளனத்தில் ஆழ்த்திக் கொண்டன.

தலைநகரில் அதாவது கொழும்பு -காக்கைதீவில் இந்திய மும்பாயைச் சேர்ந்த பெண்மணி ரீட்டா ஜோணின் பாலியல் பலாத்காரப் படுகொலை ஏற்படுத்திய அதிர்வலையை தொலைதூரப் புங்குடுதீவில இராணுவமயப்பட்ட சூழலில் நடந்த கொடூரம் ஏற்படுத்தவில்லை.



ஆக, மனித கெளரவத்திற்கான மன்றத்தின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் மற்றும் சில அரசியற் கட்சி உறுப்பினர்களும், மாதர் அமைப்புக்களைச் சேர்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரும் தவிர வேறு எவரும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவும் வரவில்லை.

மூன்று வாரங்களுக்கு மேலாக சாராதாம்பாளின் உடல் முறையாகப் பாதுகாக்கப்படவில்லை. தனது தாயின் முகத்தை இறுதி நேரத்திலாவது பார்க்க விழைந்த அவரின் மூன்று வயதுக் குழந்தைக்காக அவரது உயிரற்ற உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை மயானத்தில் வைத்துத் திறந்த போது அந்தக் கோரத் தோற்றத்தைப் பார்த்து குழந்தை அலறி அடித்துக் கொண்டு ஓடியது நெஞ்சை உருக்கும் சம்பவமாக இருந்தது.

மூன்று வயதில் அந்தக் குழந்தைக்குக் கிடைத்த அனுபவம் யுத்தத்தின் குரூரத்தைத் தான் பறைசாற்றி நிற்கின்றது.

இத்தனைக்கும் சாராதாம்பாளை பலாத்காரத்துக்குட்படுத்திக் கொலையும் செய்த அந்தக் கொடூர சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன்னால் நிறுத்தப்படாதது கொடுமையானது.

தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியேயாகும்.

## கட்சிக் காங்கிரஸ்

### கூட்டாஞ்சோறு விளையாட்டல்ல

கடந்த 13-01-2000, 14-01-2000 ஆகிய திகதிகளில் பிரேமச்சந்திரன் அவர்கள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கட்சிக் காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு கோமாளிக் கூத்தை அரங்கேற்றியுள்ளார்.

இந்தக்கேலி நாடகத்திற்கு அவர் பெரும்பாலான மத்திய குழு உறுப்பினர்களுக்கோ, பிராந்திய உறுப்பினர்களுக்கோ, கட்சி உறுப்பினர்களுக்கோ அழைப்பு அனுப்பவில்லை.

12-01-2000 அன்று மத்திய குழுக் கூட்டம் என்ற பெயரில் நடத்திய ஒரு மோசடிக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் அவர்களைக் கட்சியிலிருந்து விலக்கியதாக அறிவித்து விட்டு,

கட்சியின் தேசிய அமைப்பாளரான இரா.துரைரத்தினம் அவர்களையும் புறக்கணித்துவிட்டு, ஏனைய பெரும்பான்மையான மத்திய குழு உறுப்பினர்களுக்கு இந்த மோசடிக் கூட்டத்துக்கான அழைப்பு 10ம். 11ம் திகதிகளில் கிடைக்குமாறு மிகத் தந்திரமாக ஏற்பாடு செய்துவிட்டு இரண்டாம் பேருக்குத் தெரியாமல் 13ம் 14ம் திகதிகளில் நடத்திவிட்டு தானே ராசா, தானே மந்திரி என்று தனக்குத்தானே தனது விசுவாசிகளைக் கொண்டு முடிசூட்டிக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தையிட்டு தமிழ்ச் சமூகம் கைகொட்டிச் சிரிக்கின்றது.

போதாக்குறைக்கு கட்சியின் 1993 காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கான அரசியல் யாப்பிலிருந்து தனக்கு வசதியாக சிலவற்றை பொறுக்கியெடுத்துத் தொகுத்து அதனையே கட்சியின் அரசியல் யாப்பு என்றும் கூறியிருக்கிறார்கள்.

செயலாளர் நாயகத்தின் உரை என்பது கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளை விட தனிப்பட்ட தூற்றுதல்களுக்கே நேரத்தை எடுத்திருக்கின்றது.

கட்சிக்குள்ளேயே தனது பதவிப்பலகையைத்தானே வைத்துக்கொள்வதற்காக இவ்வளவு குத்து வெட்டுக்களை உருவாக்கி சீர்குலைவுகளை ஏற்படுத்தும் இவர்கள் தமிழ் மக்களுக்கு எதைத்தான் செய்வார்களோ.

www.padippakam.com



# திருமலை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகளும்

★ நாம் மக்களுக்காக எமது பணிகளை தொடர்ந்து புதிய உத்வேகத்துடன் தொடர்ந்து முன்னெடுப்போம்.

★ அதிகாரப்பகிர்வு:- தமிழ் மக்களுக்கும், மலையக, முஸ்லீம மக்களுக்கும் அதிகாரப்பகிர்வின் மூலம் தனித்துவங்களை நிலை நாட்டப்படுவதற்கு உறுதி செய்யப்படுவதற்கும் ஐக்கிய இலங்கைக்குள் இனசமத்துவம் அரசை வலியுறுத்துதல், விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்துதல், கூட்டங்களை நடத்துதல், பிரசுரங்களை வெளியிடுதலை முக்கியமான காரியமாக மேற்கொள்வோம்.

★ அதேவேளை மக்கள் அனுபவிக்கும் நாளாந்த துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு மக்களுடன் சேர்ந்து செயற்படுவதும், போராடுவதும். ஆகிய காரியங்களை மேற்கொள்வோம்.

அ. யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்காக கப்பலுக்கு தவம் இருக்கும், பல்வேறு கெடுபிடிகளை எதிர்நோக்கும் மக்களுக்கு எம்மாலான சகல வழிகளிலும் உதவுதல்.

ஆ. அகதிமுகாம்களில் பல்வேறு துன்பங்களுடனும், சொல்லொணா வேதனைகளுடனும் வாழும் மக்களின் விடிவுக்காக எமது பணிகளை மேற்கொள்ளல்.

இ. இதே போல் நீண்ட காலமாகவே சீராக்கப்படாத முதூருக்கான போக்குவரத்து வசதிகளை சீராக்க சகல முயற்சிகளையும் மேற்கொள்ளல்.


★ தொலை தூரக்கிராமங்களில் இருக்கும் மக்கள் அனுபவிக்கும் கெடுபிடிகள் பற்றி உள்ளூர், சர்வதேச அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அழுத்தங்களைப் பிரயோகித்தலும்.

அ. உதாரணமாக மூதூர் பகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை, அத்தியாவசிய பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், போக்குவரத்துப்பிரச்சினைகள், பாதுகாப்பு கெடுபிடிகளை வெளிஉலகுக்கு கொண்டு வருதலும், அம்மக்களுக்கு உதவுதலும்.

ஆ. வெருகல் முகத்துவாரம். இலங்கை முகத்துவாரம், வாழைத்தோட்டம், கல்லடி போன்ற மீனவர்கள் தமது மீனை சந்தைப்படுத்துவதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள்.

இ. வெருகலிருந்து மூதூருக்கான பாதை செப்பனிடப்படவேண்டும். அதேபோல் 49ம் கட்டையிலிருந்து வெருகல் முகத்துவாரம் போகும் பாதை, ஈச்சிலம்பத்தையிலிருந்து இலங்கை துறை முகத்துவாரம் போகும் பாதை திருத்தியமைக்கப்படவேண்டும். இதனால் மூதூர் பகுதியின் பல கிராமங்களில் அன்றாட அவல நிலையை ஓரளவேனும் குறைக்கமுடியும்.

ஈ. மாவடிச்சேனை, தருச்சேனை குளத்தை திருத்தியமைப்பதன் மூலம் அங்குள்ள விவசாயிகள் பெரும் பயன் அடைவார்கள்.



அதேபோல் சிறிய குளங்களான கிரான் வெளிக்குளம், பஞ்சியடிக் குளம் போன்றவையும் திருத்தியமைக்கப்படவேண்டும்.

உ. புல்மோட்டைப்பகுதியில் மக்கள் செறிந்து வாழ்ந்தாலும். பிரயாணம் செய்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் எதுவுமில்லை. குச்சவெளிவரையுமே போக்குவரத்து வசதிகள் உண்டு.

★ திருமலை மாவட்ட மக்களின் சட்டபூர்வ காணி உரிமைகளுக்கெதிராக பாதுகாப்பு காரணங்களுக்காக காணிகள் சுவிகரிக்கப்படுவதை எதிர்த்தல்.

அ. நகரத்தில் உள்ள கோயில் காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்களை தடுத்து நிறுத்துதல்.

கிருஷ்ணன் கோயில், வீரபத்திரர் பிள்ளையார் கோவில், உப்புவெளிப்பிள்ளையார் கோவில் ஆகிய கோயில் காணிகளில் நடைபெறும் அத்துமீறிய குடியேற்றங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

★ உப்பு வெளி பகுதியில் நீண்டகாலமாக நிலவும் குடிநீர் பிரச்சினைக்குத்தீர்வு காண எம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

★ தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்திற்காக குரல் கொடுத்தல்.

★ இனஐக்கியம்:- பல இனமக்கள் வாழும் பிரதேசம் என்ற வகையில் பல்லினமக்களின் ஐக்கியத்திற்காக பாடுபடுதல்.

★ தமிழ்க்கட்சிகள், இயக்கங்களிடையே ஐக்கியம்:- தமிழ் மக்களின் ஜீவாதார நலன்களுக்காக ஒன்றுபட்டு செயற்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

எமது வழி ஜனநாயக அரசியல் கட்சி என்ற வகையில் எமது செயற்பாடுகள் யாவும் ஜனநாயக வழியில் மக்களைச் சார்ந்தே மேற்கொள்ளப்படும்.

இங்கு குறிப்பிடப்பட்டவை திருமலை மாவட்டம் எதிர்நோக்கும் முக்கியமானதும் பரவலானதுமான பிரச்சினைகள் ஆகும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசியல் கட்சிகள் மாகாண மத்திய அரச நிர்வாகங்கள் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து செய்படவேண்டும்.

**மாவட்டச் செயலாளர்**
**வே. சின்னத்துரை (சிவம்)**
**திருகோணமலை.**

## நோயாளிகள் பணயம் வைப்பு



பர்மா(மியன்மார்) தாய்லாந்து எல்லைப் பிரதேசங்களில் இருந்து கொண்டு பர்மிய அரசுக்கெதிராக கோரன் இனமக்களுக்காகப் போராடுவதாககூறும் குழுவொன்று தாய்லாந்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றை கைப்பற்றியது. சில வாரங்களில் முன்னர் பரபரப்பான செய்தி.

உண்மையில் இந்த நடவடிக்கை பர்மிய சிறுபான்மை மக்களான கரேன் இனமக்களுக்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை. மாறாக அவர்களுக்கு இருக்கக் கூடிய சர்வதேச ஆதரவை பாரதூரமாக பாதிக்கவே செய்யும்.

செந்தில்

புதிய
மில்லெனியம்
பிறக்கும்
போது
முதற்குழந்தை
எங்கே பிறந்தது
என்று
உலகம்
ஆர்ப்பரித்தது.
ஆனால்
இங்கோ
முதல்
மரணம்
நம்மைக்குளம்
தேவாலயத்தின்
முன்னால்
துப்பாக்கி
வெடி
ஓசையுடன்
ஆமியின்
முகத்தில்
இரத்தத்தைப்
பூசியது.

## நியூஷிலாந்தின் பிறந்த புதிய மில்லேனிய குழந்தை



## இலங்கையில் இரத்தத்தில் மிதந்த புதிய மில்லேனியம்



பூதவுடலுக்கருகில் மரியதாஸின் மனைவியும் மகனும்

www.padippakam.com



## மலையக மடல்



# வாயிருந்தும் ஊமைகளாக..?

பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையுடன் ஆரம்பித்த மலையக மக்களின் வரலாறு ஒன்றரை நூற்றாண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே வாழும் சமூகமாக உள்ளது. நவீன உலகில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து செல்கின்ற போதும் மலையக மக்கள் மட்டும் சாபம் பெற்ற சமூகமாக இன்னமும் கீழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றது.

குடியுரிமையை பறிக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்ட சமூகத்திற்கு குடியுரிமைகூட பெரும் போராட்டத்திற்கு பின்பே வழங்கப்பட்டது. மலையக மக்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கூட வழங்காவிடில் தங்களின் பாரபட்ச நடவடிக்கைகள் வெளிச்சத்திற்கு வந்துவிடும், உலகமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வே குடியுரிமை வழங்குதலுக்குரிய நெருக்கடியை தோற்றுவித்தது.

குடியுரிமையை வழங்கும் சந்தர்ப்பத்திலும் கூட தந்திரமான, வஞ்சகமான முறையில் தங்களுடைய குறுகிய நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனேயே அன்றைய ஐ.தே.க அரசாங்கம் வழங்கியது. எந்த நோக்கத்திற்காக மக்களின் குடியுரிமையை பறித்தார்களோ பின்னர் அதை தங்களின் நலன்களுக்காகவே வழங்கினார்கள். குடியுரிமை வழங்கிய பின்பும் ஆளும் கட்சிகளுக்கு வாக்குகளை வாரிவழங்கும் வள்ளல்களாக, வறிய நிலையில் வாழும் நிலையே மலையக மக்களுக்கு மிஞ்சியது

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கூட பின்தங்கிய சமூகங்கள் சமூகபொருளாதார நிலையில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளன. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த மக்கள் இனவாதிகளின் பிடியில் சிக்குண்டு மாறி மாறி வரும் அரசுகளின் அராஜகங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக கைதுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அடையாள அட்டை இல்லாதோருக்கு அதை வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும. தொழிலில்லாதோர் வேறு இடங்களில் தொழில் செய்வதற்கான உரிய வசதிகளை செய்து கொடுப்பதிலும் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது.

உரிய பாதுகாப்போ தொழில்வசதிகளோ இல்லாத நிலையில், பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் பல்வேறிடங்களுக்கும் தொழில் தேடிச் செல்லும் அப்பாவி இளைஞர்களுக்கு தொழில் செய்யும் இடங்களில் உரிமையாளர்கள் உரிய சம்பளம் வழங்குவதில்லை. இதனைத் தட்டிக்கேட்க முனைந்தால் வேலையிலிருந்தே நீக்கிவிடுகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் மேலும் மேலும் இவர்களை விரக்திக்குள்ளாக்கு வது மட்டுமல்ல இனவாத அமைப்புக்களால் உள்வாங்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது.

நவீன உலகின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மலையக சமூகம் எங்கேயோ பாதாளப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்றது. எமது சமூகத்தின் பலவீனங்களைக் கருத்திற் கொண்ட இனவாத அமைப்புக்கள் சமூகத்தினுள் ஊடுருவி சமூகத்தை பிளவுபடுத்தி வருகின்றன.

மலையக சமூகம் ஐக்கியப்படுவதை விரும்பாத சக்திகள் அப்பாவி இளைஞர்களை தங்களின் சுயநலன்களுக்கு பயன்படுத்தி வரும் அதேவேளை சிங்கள வீரவிதான போன்ற பேரினவாத அமைப்புக்கள் இனவாத செயற்பாட்டையே தோற்றுவித்துள்ளது. எதிரும் புதிருமான இப்போக்கு மேலும் மேலும் சிக்கலான நிலைக்கே இட்டுச் செல்லும்.

வாக்குரிமை வழங்கப்பட்ட பின் மலையக மக்கள் தாங்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தும் மக்களுக்கான அடிப்படை வசதிகளில் கூட தேவையான முன்னேற்றம் ஏற்படவில்லை.


மலையகத்தின் பல பாகங்களிலும் சாதாரணதர, உயர்தர பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் கல்வியில் அடைந்த முன்னேற்றம் விகிதாசாரப்படி மிகக் குறைவாகவே உள்ளது. தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் பற்றாக்குறை, ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் சமூகப் பற்றற்றவர்களாகக் காணப்படுவதும் இதற்கு காரணமாகும்.

தற்போதைய அரசினால் பெரும் தோட்டத்துறையில் புதிய வீடமைப்புத் திட்டங்கள், மின்சார வினியோகத் திட்டங்கள், கிராம சேவகர் நியமனங்கள், சமூர்த்தி முகவர் நியமனங்கள் மற்றும் அரசாங்க துறைகளில் குறிப்பிடத்தக்களவு வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ள போதிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், சம்பள உயர்வின்மை என்பன பெரும் சுமையாக உள்ளன. வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் பெரும்பாலான மலையக மக்கள் இன்னும் பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. வாயிருந்தும் ஊமைகள் போல வாக்குரிமை இருந்தும் பயன் இல்லாது, மலையக மக்கள் வளமாக வாழமுடியாத மக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

*சந்திரகுமார் நுவரேலியா*

---

# வவுனியா தபாலகக் குண்டு வெடிப்பு



## மனித நேயமற்ற செயல்

**காண்டீபன்**

வவுனியா தபாலகத்தில் பட்டப்பகலில் குண்டு வெடித்து 10க்கும் மேற்பட்ட பலியாகி 70பேர் வரை காயமடைந்த சம்பவம் நாகரீகமான தமிழர்கள் அனைவருக்கும் வெட்கத்தையும் விஷனத்தையும் ஏற்படுத்தும் துயரங்கள் நிகழ்வாகும்.

இங்கு அப்பாவிகளே இலக்காவர் என்பது இதனைச் செயதவர்களுக்கு தெரியாதவிடயமல்ல. ஏனெனில் பொதுமக்கள் பயணம் செய்த விமானத்தின் மீது நடந்த தாக்குதல் இதனை ஐயத்திற்கு இடமின்றி நிரூபித்தது.

தபாலகம் மனிதர்களின் அன்றாட கடமையுடன் தொடர்பு பட்ட ஒரு இடமாகும்.

மின்மாற்றிகள் மீதான தாக்குதல், பயணிகள் பஸ் மீதான தாக்குதல் மக்கள் செறிந்து நிற்கும் இடங்களில் தொழில்படும் மனிதக்குண்டு எல்லாமே மக்கள் பற்றிய எந்த விதமான ஈவிரக்கமும் மற்ற நடவடிக்கைகள் ஆகும்.

ஒரு விடுதலைப்போராட்டத்திற்கும் இத்தகைய நடவடிக்கைகளுக்கும் சிறிதளவு சம்பந்தமும் கிடையாது.

புதிய மில்லேனியம் பிறக்கவிருக்கும் நேரத்திலேயே கத்தோலிக்க நிகழ்ச்சி பொறுப்பாளர் அன்ரனி மரியதாஸ் அவர்கள் வவுனியாவில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் இதகைகயதே.

சர்வதேச பயங்கரவாதி பின்லடனும் தமிழ்நாடு கோயம்புத்தூர் படுகொலைகளை நடத்திய அல்உம்மா தீவிரவாதிகளும். இதே மாதிரியான செயல்களைப் புரிந்து மக்கள் மீதான தமது வெறுப்பைக் காட்டுகிறார்கள்.

இத்தகைய தாக்குதல்களுக்கெதிராக நாகரீகமான தமிழர்கள் ஓரணியில் திரளவேண்டும்.

---

# அரியசந்தர்ப்ப........

10ம் பக்கம் தொடர்ச்சி

தீர்வும் முற்றிலும் புதிய அனுபவமாகவே அமையும்.

சர்வதேச சமூகத்தின் நேரடி ஈடு பாட்டை இதுகால வரை பலரும் கோரி வந்துள்ளனர். இப்போது அது யதார்த்தமாகி உள்ளது. முன்னர் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நாம் நழுவ விட்டது போல் இம்முறையும் நடந்து கொள்ளாமல் இந்த அரிய சந்தர்ப்பத்தை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அனைத்து தரப்பினரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அ.வரதராஜப்பெருமாள்,
முன்னாள் வடக்கு-கிழக்கு
மாகாண முதல்வர்
18-02-2000

## இரங்கல்

கடந்த 15வருடங்களுக்கு மேலாக தமிழ் அரசியல் கைதிகளுக்காக நீதிமன்றங்களில் குரல் எழுப்பியவரும், மனித உரிமை வழக்கறிஞருமான குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.



www.padippakam.com



திரை



# புகலிடத்தில் முகம் இழந்து நிற்கும் அவலச்சித்திரம்

புலம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கையை அவலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இப்படத்தை பார்த்த மாத்திரத்தே ஒரு பெருந்துயர் நெஞ்சைக் கவ்விக்கொள்கிறது. தைப்பொங்கல் தினத்தன்று சக்தி தொலைக் காட்சியில் இந்த துயர காவியம் காண்பிக்கப்பட்டது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே" என்ற பாரதியின் கவிதை வரிகளை உரக்கப் பாடவேண்டும போல் இருந்தது.

இந்த நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள். பாரிசில் கொங்கிறீற் பொந்துகளினுள் வாழும் வாழ்க்கை இதில் தெளிவாகவே சித்தரிக்கப்படுகிறது.

இந்த நாட்டில் குண்டுவீச்சு, மரண பயம், தொப்புழ்க்கொடி உறவை அறுக்கவிரும்பாமல் அறுத்துச்செல்லும் பிரிவு வேதனை, உலையின் நெருப்புடன் சேர்ந்து எரிந்துகொண்டிருக்கும் தாயின் நெஞ்சம், தேய்ந்து பழங் கயிறாகிப்போன அவளின் காலம்.

மகனிடம் இருந்து பெரிதாக எதுவும் வரவில்லையே என்ற ஆதங்கம்.

ஊரிலே நன்கு தெரிந்து பழகிய ஊரவன், நண்பன் மேற்கத்திய வாழ்க்கைச் சூழலில் இரக்க மற்ற மனிதனாக மாறிய விதம், நீ யாரோ நான் யாரோ என்ற மாதிரி நடந்து கொண்ட விதம்.

மனிதாபிமானத்தால் தனது மனதை நிறைத்து தொழில் இல்லாமல் மற்றவர்களுடன் ஒட்டாமல் மனதிற்குள் புழுங்கி சதா சிகரட் பிடித்துக்கொண்டு எமது மனிதர்களின் சுயநலத்தை வெறுத்தொதுக்கும் மனிதன்.

மிகச்சின்ன வயதிலேயே ஒரு சிறுவனாக பாரிசிற்கு வந்த ஒரு இளைஞன். மூன்று அக்காமாருக்குக் கடைசித் தம்பியான அவன் வேலை தேடி அலைந்து வானளாவ உயர்ந்த கட்டடத்தின் உச்சியில் வேலை செய்யக்கிடைத்து மனநிறைவுடன் அந்த அபாயகரமான வேலையை ஏற்ற அன்று சனசந்தடி மிக்க பாரிஸ் தெருவினிலே அநாதரவாக விழுந்து இறந்துபோகும் காட்சி. தம் குடும்பத்தில் ஒருவனை இழந்த அண்ணன்மாரின் துயரத்தை ஒத்த வகையில் அந்த இளைஞனின் அறைச் சகபாடிகளின் துயரம்.

அதிகாலை வேலை என்று சென்று மாலையில் அந்த அறை என்ற சிறைக்கு வந்து நோயில் விழுதல்.

வாராந்த விடுமுறையின் வெள்ளியிரவு நன்றாக தண்ணி அடிக்க வேண்டுமென்று வந்தவனுக்கு தம்பி ஊரில் இறந்து விட்டான் என்ற செய்தியை எப்படி எடுத்துரைப்பதெனக் கைபிசையும் நண்பர்கள்.

நள்ளிரவில் தனது தம்பிக்காக நெஞ்சுக்குள் குமிறி அழுபவனை வாய்விட்டுக் கதறச் சொல்லும் நண்பனின் தாய்மை.

வெளிநாட்டு வாழ்வின் அவலத்தை ஊரில் உள்ள தம்பிக்குப் புரிய வைக்கும் அண்ணன் அருந்ததியையும் அந்த அற்புதமான கலைஞர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தப் படம் ஈழத்தமிழர்களின் திரைப்படப் படைப்பாற்றலில் ஒரு மைல்கல் எனலாம்.

வெளிநாட்டுக்குப் போனால் வசதியான வாழ்க்கை, கை நிறையப்பணம், வீட்டாரின் எல்லாக் கஸ்டங்களுக்கும் சுலபமான தீர்வு எனப் பொதுவாகக் கருதப்படுகின்ற போது ஈழத்தமிழர்களின் புலம்பெயர்ந்த வாழ்வில் நிலவுகின்ற துயரம் நிறைந்த பக்கங்களை விளங்கப்படுத்துவதாக அமைந்துள்ள இந்த திரைப்படம் நிஜங்களின் நல்லதொரு தரிசனம்

பட ஓட்டத்தில் நாடகச்சாயல் தெரிகிறது. தெரிந்தால் தெரிந்து விட்டு போகட்டுமே! மனதைத் தாக்கும் அருமையான படைப்பு.

-றேய்-




# நீரும் நெருப்பும்

**ஒன்றரைவருடங்களுக்கு முன்னர் இந்திய திரைப்பட அரங்கில் புயலைக்கிழப்பிய படம்**

## பயர் (நெருப்பு)

இது எழுபதுகளில் கொடி கட்டி ஓடிய எம்.ஜி.ஆரின் படமல்ல!

காசி மற்றும் பெனாரஸ் என்றெல்லாம் அழைக்கப்பட்ட - அழைக்கப்படும் இந்துக்களின் புனிதத் தலம், தீர்த்தம் அமைந்துள்ள வாரணாசியில் 1930ம் ஆண்டுகளின் போது விதவைப் பெண்கள் மத நிலப்பிரபுத்துவ ஆதிக்கக், கொடுமைகளினால் அனுபவித்த கொடுந்துயரை சித்தரிக்கும் விதமாக நீர் என்ற திரைப்படத்தை எடுப்பதற்கு விமர்சனமான படங்களை எடுப்பதில் புகழ் பெற்ற தீபா மேத்தா அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டார். அதற்கு அரசின் முறையான அனுமதியை பெற்றிருந்தார்.

ஆனால் இந்து மத தீவிரவாத சக்திகளின் எதிர்ப்பும், உயர் மட்டங்களில் செல்வாக்கு செலுத்தும் சக்திகளும் அத்திரைப்பட முயற்சிகளை நெருக்கடிக்குள்ளாக்கின.

இந்திய சமூதாயத்தின் குறைபாடுகளை மாத்திரமே தீபா மேத்தா வெளிப்படுத்துகிறார். இந்தியாவில் எவ்வளவு நல்ல விடயங்கள் இருக்கின்றன. என்று இந்து தீவிரவாதிகள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

குறைபாடுகளே சமூகத்தை பீடித்துள்ள நோயை வெளிப்படுத்துகின்றன.

நோயின் குணமறிதலும், சரியாக நோயை அறிதலும், நோய்க்கு வைத்தியம் செய்தலுமே மருத்துவனின் வேலை. உடலிலுள்ள நல்ல பகுதிகளையெல்லாம் விட்டு விட்டு நோயுடன் வைத்தியன் தொடர்புபடுகிறான் என்று வைத்தியனைக் குற்றம் சாட்டுவது-விமர்சிப்பது போன்றதே இது.

தீபா மேத்தா இந்திய சமூகத்தைத் தேக்கமடைய வைத்திருக்கும் நோய் பற்றி கேள்வி எழுப்புகிறார். இந்தியாவில் நிலவும் சமூக நோய்களையும் அவை தொடர்பான விபரங்களையும் படம் பிடித்துக் காட்டுகிறார். இந்திய சமுதாயத்தை முன்னோக்கிய திசையில் இட்டுச் செல்ல இவ்வாறான முயற்சிகளும் அவசியமே.

தீபா மேத்தாவின் நெறியாள்கையில் உருவாகிய இந்த படத்தில் நடித்துள்ள ஷபானா ஆஸ்மி போன்றோர் எம்மனதிலிருந்து அகலாத அற்புதமான நடிப்பைக் காட்டியிருந்தார்கள். இந்தியக் குடும்ப அமைப்பில் நிலவும் அடக்குமுறை பற்றி இந்த படம் தீவிரமான கேள்விகளை எழுப்பியிருந்தது. நிலப்பிரபுத்துவ மற்றும் மதத்தளைகளால் கட்டுண்டு கிடக்கும் குடும்பங்களில் ஆண்களுக்கு முகத்தை மறைத்து வாழும் பெண்களின் நிலைமையைச் சித்தரிக்கின்றது.

ஒரு குடும்பத்தைச்சேர்ந்த இரண்டு பெண்களிடையே ஏற்படும் அத்தியந்தமான-அந்தரங்கமான உறவை அந்தத் திரைப்படம் பகிரங்கப்படுத்தி நின்றது. தமது குடும்ப அமைப்புடன் சமரசம் செய்ய முடியாத அந்த இரண்டு பெண்களும் வீதிக்கு வருகிறார்கள்.

ஆனால் ஏதோ நிகழாதது நிகழ்ந்தது போல வக்கிர புத்தி படைத்த இந்துமத அடிப்படைவாதிகள் பம்பாயில் - மும்பாயில் அந்தப் படம் ஓடிய திரையரங்குக்கு தீவைத்தனர்.

ஆனால் கொலை, பயமுறுத்தல், வன்முறை, தடைகள் அனைத்தையும் தாண்டி அந்தப் படம் வெற்றி பெற்றது. உலகப் புகழ் பெற்றது.

தீபா மேத்தா போன்றோரின் முயற்சிகளுக்கு நீர் படத்திற்காக நிஜமாகவே தனது தலையை மொட்டை அடித்துக் கொண்டுள்ள ஷபானா ஆஸ்மி போன்றோரின் துணிச்சலே உறுதுணையாக உள்ளது. அவர்கள் அமரத்துவமான திரைப்படங்களுக்கு தம்மை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களின் முயற்சி எத்தகைய இடைஞ்சல் வந்தாலும் வெற்றி பெறவாழ்த்துவோம்.

-றேய்-



www.padippakam.com



# பிரித்தானியாவுக்கு உதவினார் என்பதால் பினோச்சேக்கு விடுதலை

பினோச்சே பிரித்தானியாவின் தொழில் கட்சி அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஸ்பெயினின் பிரசைகள் பலரை படுகொலை செய்ததற்காகவே அவர் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டது. ஸ்பெயினும் பினோச்சேயை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்துக் கொண்டு இருந்தது.



பினோச்சே சிலியில் 70களில் முற்பகுதிகளில் ஜனநாயக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சல்வடோர் அலண்டேயை இராணுவச் சதிப்புரட்சி மூலம் படுகொலை செய்து ஆட்சிசைப் பிடித்தவர். அதன் பின்னர் பல்லாயிரக்கணக்கான சிலியின் இளைஞர்கள், மாணவர்கள், தொழிற் சங்கவாதிகள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் எண்ணுக் கணக்கற்ற படுகொலைகள் செய்து கால் நூற்றாண்டு காலம் கொடூர பாசிச ஆட்சி நடத்தியவர்.

சிலியின் அரசியலில் இருண்ட காலமது. பிரித்தானியாவில் கன்சவேர்டிவ் கட்சி தலைவி மாக்கிரட் தட்சர் அவர்கள் பினோச்சேயின் கைது பற்றி குறிப்பிடுகையில் அவர் பிரித்தானியாவின் நண்பர் என்றும் "போக்லண்ட்" யுத்தத்தின் போது அரிய பல தகவல்களை தந்து உதவியர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இங்கு மனித உரிமை மீறல் என்பது ஐரோப்பிய மையமயப்பட்டதாகவே இருக்கிறது.

எத்தகைய கொடூர ஆட்சியாளனாக இருந்தாலும் பிரித்தானியாவுக்கு உதவியவர் என்பதே இங்கு முதன்மை பெறுகிறது.

இதன் தொனிப்பொருள் சிலி நாட்டு மக்கள் எக்கேடு கெட்டால் என்ன என்றே ஆகிறது.

பினோச்சேயை உடல் நலத்தை காரணம் காட்டி பிரிட்டிஸ் அரசாங்கம் விடுதலை செய்ய முற்பட்டமை உலகின் ஜனநாயக வாதிகளுக்கும், மனித உரிமையாளர்களுக்கும், பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கும்பேரிடியான செய்தியாக அமைந்தது.

பிரித்தானியா அரசாங்கத்தையும் மீறி பிரித்தானியா உயர்நீதி மன்றம் பினோச்சேயின் உடல் நலம் பற்றிய அறிக்கைகளை இறுதி முடிவு செய்யும் பொறுப்பை பாதிக்கப்பட்ட மக்களினுடைய நாடுகளின் நீதிமன்றங்களில் பொறுப்புக்கு விட்டுள்ளமை இடிந்துபோய் இருந்தவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி உள்ளது. கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்குத்தான் என்பது பினோச்சேயின் விடயத்திலும் உண்மையாகட்டும். ●



# ரஷ்யப் படைகளின் வசம் குரொஸ்னி செச்னியாவில்குண்டுமழை

கடந்து போன நூற்றாண்டின் மாபெரும் மனிதாபிமான புரட்சியை நடத்திய ரஷ்யாவின் புதிய வாரிசுகள் செச்சினிய மக்கள் மீது நடத்தும் தாக்குதல் உலகின் கோடான கோடி மக்களின் நெஞ்சங்களைப் பதைபதைக்க வைக்கும் செயலாகும்.

கண்ணுக்கெட்டிய எதையெல்லாம் அழிக்க முடியுமோ அதை எல்லாம் அழிக்கிறார்கள். 70வருடங்கள் சமதர்ம அரசை நிலை நாட்டி வைத்திருந்த அந்த மாபெரும் நாட்டின் மனிதாபிமானம் எங்கே போனது. அணுகுண்டைப் போடவில்லையே தவிர ரஷ்யாவின் அத்தனை நவீன ஆயுதங்களும் குரொஸ்னி மீது பிரயோகிக் கப்படுகின்றன.

ஒன்றாக இருந்த சோவியத் யூனியனை பதினைந்தாக உடைப்பதில் மகிழ்ச்சி கண்ட இன்றைய ரஷ்ய ஆட்சியாளர்கள் எதற்காக இன்னும் சில நாடுகள் உருவாகுவதைத் தடை செய்ய முற்படுகின்றார்கள். செச்னியாவை இந்த முறையில் ரஷ்யாவினால் வைத்திருக்க முடியாது. செச்னியா புதிய ஆயிரமாண்டில் ரஷ்யாவுக்கு முதலாவது கறை.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு துளி விசம் என்பது போல 1990 களில் மிகையில் கொப்பச்சேவ் அவர்களால் ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் லெனின், கார்ல் மாக்ஸ் சிலைகளை மாத்திரம் தகர்த்தெறிவதில் மாத்திரம் முடிவடையவில்லை. முன்னாள் சோவியத் குடியரசுகளினதும், அந்தக் குடியரசுகளில் சுயாட்சி பெற்றிருந்த மாநிலங்களினதும் வாழ்வையும் தான் தகர்த்துக்கொண்டிருக்கிறது.

இந்த ஈவிரக்கமற்ற செயற்பாடுகளுக்கெதிராக ரஷ்ய மக்கள் கொதித்தெழாமல் இல்லை. ரஷ்யப் படைவீரர்களின் தாய்மாரும் உற்ற சுற்றத்தினரும், முற்போக்காளர்களும் கொடிய நிலைமைகண்டு உறுமியபடி உள்ளனர்.

ரஷ்ய மக்களே ரஷ்யப் படைகளை செச்னியாவிலிருந்து வெளியேற்றக் கோரும் நிலை தான் காணப்படுகின்றது. ரஷ்யப் படைகள் தமது அத்தனை சக்திகளையும் குவித்து குரொஸ்னியைக் கைப்பற்றியிருப்பினும் கூட அது நிரந்தரமானதாகத் தெரியவில்லை. ●

# கம்பூச்சியா ஆப்கானிஸ்தான் தரும் பாடம் மண்டை ஓடுகளைக் குவிக்கும் -தேசிய வாதம்

இருக்கும் அரசுக்கெதிரான போராட்டங்கள் என்பதால் எல்லா வகையான தேசிய வாதங்களும் முற்போக்கானவை யல்ல.



உலகில் கம்பூச்சிய தேசிய வாதமும், ஆப்கானிய தேசிய வாதமும் எமக்கு நல்ல பாடமாகும்.

கம்பூச்சிய சுதந்திரத்திற்கு ஆதரவாக நின்ற இளவரசர்சிகானுக் ஒரு ஜனநாயகவாதி. அதேபோல் ஆப்கானிஸ்தானில் பதவியில் இருந்த நஜீப் புல்லாகூட மத அடிப்படை வாதங்களுக்கு அடிபணியாத மனிதர்.

இவர்களின் செயற்பாடுகளுக்கு இடமளியாத செயற்பாடுகளை முறியடித்த கம்பூச்சியாவும், ஆப்கானிஸ்தானும் எப்படி இருந்தன என்பது வரலாறு எமக்கு உணர்த்தும் பாடமாகும். பொல்பொட் நடத்திய படுகொலைகள் அவரின் ஏகாதி பத்திய எதிர்ப்பு கொள்கைகளுக்காகவும், விவசாயப் பாட்டாளி வர்க்கத்தின் மீதான விசுவாசத்திற்காகவும்? நியாயப் படுத்தப்பட்டன.

எமது நாட்டிலும் ஜனநாயக விரோதப் படுகொலைகள் இதேவிதமாகத்தான் நியாயப்படுத் தப்படுகின்றன. இது மிகவும் குறுகிய கண்ணோட்டமாகும். புதிய நூற்றாண்டுக்கென புதிய பாதையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்.

அது இணக்கப்பாடு, ஜனநாயகம், மனித உரிமைகளை வலியுறுத்துவதாக பெருவாரியான மக்களின் அபிலாசைகளை பிரதிநி தித்துவப்படுத்துவதாக இருக்க வேண்டும். ●

# புத்தாயிரமாம் ஆண்டு.........

## 2ம் பக்கம் தொடர்ச்சி

இது மரணித்த எம் மக்களுக்கு நாம் செலுத்தும் மாபெரும் அஞ்சலியாக இருக்கும்.

பேரினவாதம் இந்த நாட்டில் ஒரு உண்மையே. ஒரு யதார்த்தமே. ஆனால் அது இன்று மேலோங்க முடியாத அளவுக்கு பலவீனம் அடைந்துவிட்டது.

யுத்த வாதிகளும் தமது உச்சத்திறன்களைப்பாவித்து யுத்தம் புரிந்து விட்டார்கள். சாதித்தது மரணமும் அவலமும்தான்.

செக்கோசெலவாக்கிய பத்திரிகையாளனும், போராளியுமான யூலியஸ் பூசிக் கூறுவான்: தான் மனிதர்களின் மகிழ்ச்சியான வாழ்வுக்காக போராடுவதாக! அதற்காக மரணத்தையும் ஏற்றுக்கொள்கிறேன் என்றான்.

ஆனால் இங்கு மரணத்தை வன்முறையை வழிபடும் சுய பச்சாதாபம் கொண்ட சமூகமாக எமது சமூகம் சீரழிந்து கிடக்கிறது. இந்த மூடத்தனத்திலிருந்து விடுதலை வேண்டும். இந்த நோயிலிருந்து வக்கிரத்திலிருந்து விடுதலை வேண்டும.

தென்னாசியாவில் மெத்தப் படித்தவர்கள் என இறுமாந்திருந்த நாம் இன்று காட்டுமிராண்டி நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

உலகில் பலநிற, பல மொழி பேசும், பல கலாசாரம் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள். இந்த உலகம் பல வண்ணங்களின் கலவை. எமக்கு எவருடனும் ஒட்டவில்லை. எங்கு சென்றாலும் நாம் கிணற்றுத் தவளைகளாக, குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களாக வாழ்கிறோம்.

இந்தப் புதிய நூற்றாண்டில் உலகம் மேலும் சுருங்கிவிடும். போக்குவரத்து மற்றும் சர்வதேசத் தொடர்பு வலைப்பின்னல்கள் அதிகரித்துள்ளன.

நாம் தென்னாசிய அளவில், ஆசிய அளவில், உலக அளவில் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும். அர்த்தமற்ற மாயைகளில் உழலக்கூடாது. அந்த மாயைகளுக்காக எமது சமுதாயத்தைப் பலியாக்கக்கூடாது.

சிறுவர்களுக்காக, பெண்களுக்காக, இனங்களுக்காக, மனித உரிமைகளுக்காக, ஜனநாயகத்திற்காக குரல்கொடுக்கச் சர்வதேச அளவில் ஐ.நா. தொடக்கம் பல அமைப்புக்கள் இருக்கின்றன. புதிய நூற்றாண்டில் மேலும் மேலும் அதிகரித்து, உலகஅரசு பற்றிய கருத்து உருவாகலாம்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக, பெண்களின், இனங்களின் உரிமைகளுக்காக உலகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

எமது நாட்டிலும் நடைபெற்றன. ஆனால் இனசமத்துவத்துக்கான போராட்டத்தில் பாசிசமும் இன அடிப்படைவாதமும் தலையெடுத்து எமது சமூகம் தற்கொலை நிலைக்கு இட்டுச்செல்லப் பட்டுள்ளது. இதிலிருந்து மீண்டெழ வேண்டும்.

பேரினவாதத்திற்கெதிராகவும், பாசிசத்திற்கெதிராகவும் போராடும் ஒரு மாபெரும் மக்கள் இயககம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மக்களின் மௌனமல்ல, விழிப்புணர்ச்சி என்பதே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எமக்கு அவசியப்படுகிறது.

அந்த வரலாற்று அவசியத்தை உணர்ந்த சக்திகள் இன, மத, பால், வேறுபாடுகளுக்கு அப்பால் ஒண்றிணைய வேண்டும்.

"முதல் கோணல் முற்றும் கோணல்" என்பது எமது சமூகத்தின் ஆழ்ந்த நம்பிக்கை. எனவே புதிய நூற்றாண்டு எமக்கு கோணலாக இருக்கக்கூடாது.

கொலைகள், வன்முறைகளை மேற்கொள்பவர்களுக்குக் கூட இந்த நம்பிக்கை உண்டு. அவர்களும் சிந்திக்க வேண்டும். அவர்கள் கொலைப் பயங்கர வன்முறையை விட்டு ஆக்கபூர்வமான வழிகளில் செயற்பட முன் வரவேண்டும்.

அது எமது சமூதாயத்திற்குச் செய்யும் மாபெரும் பங்களிப்பாக இருக்கும். கலிங்கம் வென்ற அசோகன் வன்முறைகளை வெறுக்கவில்லையா. வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் நிறைய உண்டு.

எனவே நல்லது நடக்க நாம் கடும் முயற்சி செய்வோம். நல்லது நடக்கும் என நாம் நம்புவோம்.

எல்லோர்க்கும் எமது மனம் நிறைந்த புத்தாயிரமாம் ஆண்டு வாழ்த்துக்கள்.

www.padippakam.com



## கண்ணோட்டம்

# அறிவு பூர்வமான அணுகுமுறை தேவை

நோர்வேயின் ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினைத்தீர்வுக்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழ்க்கட்சிகள் வழங்கக்கூடிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பு என்ன என்ற கேள்விக்கு தமிழ்க்கட்சிகள் நடை முறையில் பதிலளித்தாக வேண்டும்.

ஜனாதிபதி தலைமையில் பொதுஜன முன்னணியுடன் நடத்தப்பட்ட தொடர் கலந்துரையாடல்களில் வடக்கு கிழக்கு இணைப்பு, நில அதிகாரம், சமஸ்ட்டி ஆகிய விடயங்கள் தமிழ்க்கட்சிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டன.

ஆனால் தீர்வின் அடிப்படையாகவுள்ள பல விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளன.

மாநில நிரலில் குறித்துரைக்கப்படாதவிடயங்கள் இயல்பாகவே மத்திய அரசிடம் சென்றுவிடும். அவ்வாறு குறித்துரைக்கப்படாத விடயங்கள் பல உள்ளன.

அடுத்த முக்கியமான விடயம். நிதி ஆதாரங்களைத் திரட்டுதல். உதாரணமாக விற்பனை வரி நேரடியாக மாநில அரசினாலேயே திரட்டப்படவேண்டும். ஆனால் இப்போது கலந்துரையாடப்படும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளில் விடயம். மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக உள்ளது.

மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான நிர்வாக முறைமை, நிர்வாக உறவு என்பவை தொடர்பாக அரசாங்கத்தின் பிரேரணைகளில் தெளிவான கருத்துக்கள் இல்லை. அதிகாரப்பரவலாக்கலின் முதுகெலும்பாக இருக் கக்கூடிய விடயத்தில் தெளிவான அக்கறையை தமிழ்க் கட்சிகள் காட்டவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பிராந்தியங்களின் ஐக்கிய அரசு என்று குறித்துரைக்கப்பட்டுள்ளது. உண்மையில் ஐக்கிய அரசுகள் என்றே இருக்கவேண்டும்.

இந்தியாவில் மாநில மத்திய அரசுகள் இருக்கின்றன.

இந்தியாவில் உள்ளதைவிட அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன, என்று பிரபலப்படுத்தப்பட்டுள்ள யோசனைகளில் அந்த அம்சங்கள் இடம்பெறவில்லை. என்பது சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும்.

மாநில அரசாங்கம் என்று சொல்வதற்கு தற்போது உள்ள பிரேரணை தயாராக இல்லாத நிலைமைகளைத் தமிழ்க்கட்சிகள் கவனத்திற்கு எடுத்து செயற்படவேண்டும். இந்த விடயங்கள் தொடர்பாக தனது அனுபவங்களின் அடிப்படையில் வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் அவர்கள் அரசாங்கத்தின் "தீர்வுயோசனைகள் மீதான திருதங்களும் கருத்துக்களும்" என்ற தலைப்பில் சிறிய கைநூல் ஒன்றையும் வெளியிட்டு இருந்தார். இக்கை நூல் இக்கலந்துரையாடல்களுக்கு உதவிகரமான ஒன்றாகும்.

தீர்மானகரமான காலகட்டத்தில் நாம் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

அதிகாரப்பகிர்வு எந்தளவுக்கு அவசியமோ அந்தளவுக்கு எமது சமூகத்தில் ஜனநாயகமும், அடிப்படை மனித உரிமைகள், கருத்துச்சுதந்திரமும் வலியுறுத்தப்படவேண்டும்.

நோர்வேயின் ஒத்துழைப்புடன் நடக்கவிருக்கும் சமாதான பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் இவை இடம் பெறுவது மிகமிக அவசியம்.

அனைத்து விடயங்களும். கருத்துக்கு எடுக்கப்பட வேண்டும் என்பது தமிழர்களின் நியாயமான எதிர்பார்ப்புமாகும்.

# கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கட்டளை

அண்ணாமலை
வரதராஜப்பெருமாள்,
இல. 15சீ, சமிற் தொடர்மாடி,
கொழும்பு 5.

வழக்காளி
வழக்கு இல: 5543,விசேடம்

எதிர்
1. கந்தையா. பிரேமச்சந்திரன்
அல்லது
சுரேஷ்பிரேமச்சந்திரன்,
24சீ, சமிற் தொடர்மாடி,
கொழும்பு 5

2. தர்மராஜா வில்சன்,
88/F-1/1, காலி வீதி,
தெகிவளை.

எதிராளிகள் 2000 பெப்ரவரி 2ம் தேதியாகிய இன்று,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்க்கு.

மேற்போந்த வழக்கானது, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும் என்ற வகையில் மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகளுக்கு எதிராக மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள வழக்காளியினால்.

(அ) வழக்காளி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்படுவதாக 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி நடைபெற்றதாகக் கோரப்படும் மத்திய குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கோரப்படுவதை, ஆரம்பத்திலேயே வலுவற்றதொன்றெனவும், அது சட்ட வலுவோ பயனோ அற்றதெனவும், வழக்காளி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஓர் உறுப்பினராகத் தொடர்கின்றார் என்றும் ஒரு பிரதிக்கினையை பிறப்பிக்குமாறும்

(ஆ) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்புரிமையிலிருந்து வழக்காளி நீக்கப்பட்டுள்ளதாகக் கோரப்படுவதை செயற்படுத்துவதிலிருந்து, அத்துடன் அல்லது குறித்த கட்சியின் உறுப்புரிமையைப் பயன்படுத்துவதில் வழக்காளிக்கு உள்ள உரிமையில் தலையீடு செய்வதிலிருந்து, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எதிராளிகள், அதனது பணியாட்கள், முகவர்கள் மற்றும் அதன்கீழ் செயற்படும் ஏனையோருக்கும் இவ்வழக்கு முடிவுறும் வரை தடைவிதிக்கும் ஓர் இடைக்காலத் தடையாணையை வழங்குமாறும்

(இ) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்புரிமையிலிருந்து வழக்காளி நீக்கப்பட்டுள்ளதாகக் கோரப்படுவதை செயற்படுத்துவதிலிருந்து அத்துடன் அல்லது குறித்த கட்சியின் உறுப்புரிமையை பயன்படுத்துவதில் வழக்காளிக்குள்ள உரிமையில் தலையீடு செய்வதிலிருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எதிராளிகள், அதனது பணியாட்கள், முகவர்கள் மற்றும் அதன்கீழ்ச் செயற்படும் ஏனையோருக்கும், இவ்வழக்கு முடிவுறும் வரை, தடைவிதிக்கும் தடைக் கட்டளையொன்றினைப் பிறப்பிக்குமாறும்.

(ஈ) வழக்குச்செலவைப் பெற்றுத் தருமாறும்.

(உ) கனம் நீதிபதி அவர்கள் யோக்கியதை எனக்கருதும் வேறு பிற நிவாரணங்களைப் பெற்றுத் தருமாறும்.

கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினாலும், இதே வழக்கு மூலமாகவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கெதிராக வழக்காட வேண்டியிருப்பதனாலும்,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 1ம் மற்றும் 2ம் எதிராளிகளுக்கெதிராக இதே வழக்கு முலமாகவே வழக்காட வேண்டி வழக்காளி விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாலும்,

குறித்த விண்ணப்பத்தினை 2000ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் தேதிய தனது கட்டளை மூலம் இந்நீதிமன்றம் அனுமதித்ததோடு ஈழமக்கள் புரட்சிகர முன்னணியினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகளுக்கு எதிராக இதே வழக்கு மூலம் வழக்காடவும் அனுமதி வழங்கியிருப்பதனாலும்

2000ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளையில், இவ்வழக்கு பற்றி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அனைத்து உறுப்பினர்கட்கும் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்துவதன் மூலம் அறிவித்தல் கொடுக்கும்படி நீதிமன்றம் பணித்துள்ளமையினாலும்,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பாகவும் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்ற வகையிலும் 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகளுக்கு எதிராக வழக்காடும் பொருட்டு இவ்வழக்கை வழக்காளி தாக்கல செய்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றின் ஆணைப்படி

## அரியசந்தர்ப்பம்! ஆக்கபூர்வமாக பயன்படுத்திக்கொள்வோம்!!

இலங்கையில் நீண்ட காலமாக நிலவிவரும் இனமுரண்பாட்டுக்கும் அதன் விளைவான யுத்தத்துக்கும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வையும் அமைதியையும் ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசின் ஒப்புதலுடன் நோர்வே அரசாங்கம் செயற்படத்தொடங்கியிருப்பது இலங்கையில் வரலாற்றில் வரவேற்கத்தக்க ஒரு பிரதானமான கட்டமாகும்.

ஏற்கனவே மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் யுத்தங்களுக்குள் அகப்பட்டு நிற்கும் மக்களுக்கு அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் நோர்வே அரசு மிகுந்த அனுபவங்களையும் கணிசமான வெற்றிகளையும் கண்டிருக்கின்றது. இப்போது இலங்கையின் விவகாரத்தில், இலங்கையோடு வெவ்வேறு வகைகளில் தொடர்புடைய பிரதானமான நாடுகளினுடைய அரசுகளின் ஒத்துழைப்புடன் நோர்வே நாடு மேற்கொண்டுள்ள முன்முயற்சி வெற்றிகரமாக முடிவடைய வாழ்த்துகிறோம்.

நோர்வே ஏற்கனவே பெற்றுள்ள அனுபவங்களுக்கும் இலங்கையின் விவகாரத்துக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. அத்தோடு நோர்வே அரசானது ஏனைய நாடுகளில் ஈடுபட்டபோது அங்கெல்லாம் அதன் ஈடுபாடு வெற்றியை அடைந்ததன் பின்னரே வெளியுலகத்துக்குத் தெரியவந்தது.

ஆனால் இங்கோ, அதன் முயற்சியானது மிகவும் பிரபல்பத்துடனேயே ஆரம்பிக்கின்றது. இதன்விளைவாக விடயம் காத்திரமாக ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே உச்சக்கட்டமான எதிர்பார்ப்புக்களையும் உருவாக்கிவிட்டுள்ளது. இந்த நிலைமைகள் நோர்வேயின் முயற்சிகளைப் பலவீனப்படுத்துபவையாக இல்லாமல் உற்சாகம் தருபவையாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்க்கை.

நோர்வே அரசுக்கு இலங்கையின் இனப்பிரச்சினையும் அதற்கான அரசியற்

தொடர்ச்சி 07ம் பக்கம்

படிப்பகம்